1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள பகுதிகளில் இணைப்புச் சாலைகள ஏற்படுத்தும் பொறுப்பும் எற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. தீவிர கிராம சிரமைப்புத திட்டத்தின் கீழும் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இவை எல்லாம் சேர்ந்து ஓரளவு குறைகளை சிறிதளவு போக்க முடியும் என்று கருதலாம்.

Storm Water Drainage System in Madras

* 151 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the steps taken by the Government to prevent the flooding of the low-lying streets during the rainy seasons in the City of Madras?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை நகர வெள்ள வடிகால் அமைப்பை மேம்படுத்த ஓர் அடிப்படைத் திட்டம் தயாரிப்பதுடன் வெள்ளத்தால் வரும் கஷ்டங்களுக்குத் தீர்வு காணத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : ஒவ்வொரு வருஷமும் சாதாரண மழை பெய்தாலும் எல்லா இடங்களிலும் தண்ணீர் தேங்குவதன் காரணமாக இதைத் தடுக்க உடனடியாக ஏற்பாடு செய்து அதிகமான தண்ணீர் நிற்கக்கூடிய இடங்களில் பம்புகள் வைத்து இறைக்கவும், தாழ்வான இடங்களை மேம்படுத்தவும் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா? அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை மாநகராட்சிச் சாலைகளைப் பொறுத்தவரையிலும் 1,169 கிலோ மீட்டர் நீளம் உள்ளவையாக இருக்கின்றன. அதிலே 250 கிலோ மீட்டர் அளவுக்குத்தான் வடிகால் அமைந்திருக்கின்றது. மற்றைய பகுதிகளுக்கு வடிகால் அமையவில்லை. இதற்காக கடனாக 87 லட்சமும் மாநகராட்சி 50 லட்சமும் ஆக ஒரு கோடி முப்பத்தேழு லட்சம் ரூபாய் கடந்த பத்தாண்டுகளில் செலவழித்தும் போதுமானதாக இல்லை. கடந்த 22—11—1971 அன்று தலைமைச் செயலகத்தில் மாநகராட்சி மன்ற அதிகாரி களோடு பேச்சு வார்த்தை நடத்தி பிறகு வடிகால் திட்டம் அமைப்பது பற்றி 14—12—1971 அன்று யோசனை தெரிவிக்கப் பட்டது. அதன்படி இதற்காகத் தனிச் செயற்குழு அமைப்பது

1972 ஆகஸ்டு 18]

என்றும் நிர்வாகப் பொறியாளர் தலைமையில் சிறப்புக் குழு அமைத்து இந்தப் பணிக்காக பாதியை மானியமாகவும், பாதியைக் கடனாகவும் வழங்க வேண்டுமென்று யோசனை தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அறிக்கையை மாநகராட்சி மன்றத்தில் சிறப்புக் குழுவினர் ஆராய்ந்து அரசுக்கு அளித்த பிறகு தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. இராம. அரங்கண்ணல் : மாநகராண்மைக் கழகம் எடுத்துக் கொண்டுள்ள நல்ல நடவடிக்கைகளின் காரணமாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தண்ணீர் தேங்கியதை விட இப்போது குறைவாகத்தான் தண்ணீர் தேங்குகிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளின் காரணமாக ஓரளவு தண்ணீர் தேங்குவது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு கோடி முப்பத்தேழு லட்சம் ரூபாய் அளவுக்குச் செலவு செய்தும் அது போதுமான அளவுக்கு இல்லையென்ற காரணத்தால் இப்போது சிறப்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய அறிக்கை வந்து நடவடிக்கைகள் மேற்கொண்ட பிறகு பல இடங்களில் தண்ணீர் தேங்குகின்ற நிலை ஏற்படாமல் சீர் செய்யப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்னையில் இதுமாதிரி லோ லையிங் ஸ்ட்ரீட்ஸ் இருப்பது போல் மதுரையிலும் இருப்பதால் வெள்ள நீர் வடிகால் திட்டத்தை மதுரையில் அமைக்க ஆலோசனை இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய செயற்குறிப்பு இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் நிலைமைகளை ஆராய்ந்து பதில் கூறலாம்.

திரு. நா. வீராசாமி : இப்படிப்பட்ட திட்டங்களை டில்லி போன்ற மாநகராட்சிகள் நிறைவேற்ற மத்திய அரசாங்கம் மானியமாகப் பணம் கொடுக்கிறார்கள். நம்முடைய மாநகராட்சி இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசாங்கம் பணம் கொடுத்திருக்கிறதா ? இல்லையென்றால் இனியாவது பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்காகத் தனியாகக் கேட்கவில்லை. கிரேட்டர் மெட்ராஸ் என்ற அளவுக்குப் பெரியதொரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் சாலை வசதி, குடிநீர் வசதி, புறநகர் வளர்ச்சி வசதிகள் ஆகியவற்றுக்கான திட்டங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அது பற்றி மறுபடியும் ஆராயும்படி நமக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதிலே, டெல்லி போன்ற நகராட்சிகளுக்கு அளித்தது போல் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

சிவகாசி—கிருஷ்ணன் கோயில் சாலை

* 152 வினா—**திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியிலிருந்து எம். புதுப்பட்டி வழியாகக் கிருஷ்ணன் கோயில் வரை செல்லும் சாலையைப் பழுது பார்த்துப் பாலங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. காளிமுத்து : போக்குவரத்துக்கு மிக மிக இன்றியமையாத அந்தச் சாலைகளைப் பழுது பார்த்து பாலங்கள் அமைத்திட இனியாவது முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கோருகின்ற பாலம் கட்டுவதற்குத் தோராயமாக நான்கு லட்சம் ரூபாய் ஆகுமென்றும், இதர சாலைகள் என்ற தலைப்பின் கீழ் அது எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி தற்போது போதுமானதாக இல்லாததால் எடுத்துக்கொள்ள இயலாது என்றும் தலைமைப் பொறியாளர் தெரிவித்திருக்கிறார்கள். அடுத்துப் போடப் படுகின்ற திட்ட காலங்களிலே சாலைகள் பற்றிய நிதி ஒதுக்கீடு செய்யும்போது இதைக் கவனிக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவிக்கலாம்.